**செய்தி வெளியீடு :05** **நாள் :14.01.2020**

# மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர், திரு.பன்வாரிலால் புரோகித் அவர்களின் பொங்கல் வாழ்த்துச் செய்தி

தமிழர் வாழ்விற்கு மகிழ்ச்சியூட்டும் திருநாளாம் பொங்கல் மற்றும் சங்கராந்தியை முன்னிட்டு தமிழக மக்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொங்கல் விழாவானது அறுவடையின் சிறப்பைக் கொண்டாடுவதோடு மட்டுமல்லாமல், அன்றாட வாழ்விற்கு மிகவும் உறுதுணை புரிகின்ற ஆற்றல், உயிர்ப்பு ஆகியவற்றை நமக்கு வழங்கிடும் சூரியக் கடவுளுக்கு நன்றி செலுத்தும் விழாவாக கொண்டாடப்படுகிறது. மேலும், வேளாண் மக்களின் உழைப்பையும் தியாகத்தையும் போற்றிடும் வகையில் எழுச்சியுடன் தமிழர்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த தை திருநாளில், நாம் பெற்ற அளவற்ற அறுவடைக்காக இயற்கைக்கு நமது பிரார்த்தனைகளையும் நன்றியினையும் செலுத்துவோம்.

கொண்டாட்டம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியனவற்றை உள்ளடக்கிய பொங்கல் திருநாளின் தொடக்கமானது அனைத்து குடும்பங்களுக்கும் மிகுதியான மகிழ்ச்சியையும், செழிப்பையும் அள்ளித்தர வாழ்த்துகின்றேன்.

**பன்வாரிலால் புரோகித்**

**தமிழக ஆளுநர்**

---

ராஜ்பவன், சென்னை -22 ஒம்/-

நாள் :14.01.2020 கூடுதல் இயக்குநர் (ம.தொ)

**Press Release No.05** **Date : 14.01.2020**

# GOVERNOR THIRU. BANWARILAL PUROHIT'S PONGAL MESSAGE

On the joyous occasion of Pongal and Sankranthi, I extend my best wishes and greetings to the people of Tamil Nadu.

The Pongal festival is the celebration of harvest, and thanks giving to the Sun God for providing the energy, vitality and life for day to day living and sacrifice of farmers. On this day, we offer our prayers and thank giving for the blessings of Nature and the bounteous harvest that the beginning of the month of 'Thai' provides us with.

The festival Pongal encompasses within itself the concepts of festivity, equality and fraternity. May the onset of Pongal bring greater happiness and prosperity in all our families.

**BANWARILAL PUROHIT**

**GOVERNOR OF TAMIL NADU**

---

Raj Bhavan, Chennai -22 Sd/-

Date : 14.01.2020 Addl. Director (PR)